# முல்லைத்திணையின் பண்பட்ட வாழ்வு

முனைவர் தா. ஜெயந்தி

தமிழ்த்துறை

**அறிவியல் மற்றும் கலையியல் புலம், எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில் நுட்பக் கல்விநிறுவனம்**

**காட்டாங்குளத்தூர்**, India

**Jayanthi.d@ktr.srmuniv.ac.in**

*Abstract- குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய அன்பின் ஐந்திணையுள் முல்லைத்திணையில் அமைந்துள்ள பண்பட்ட வாழ்வினை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். எனவே பத்துப்பாட்டில் அமைந்துள்ள முல்லைப்பாட்டும், பதினெண்கழ்க்கணக்கில் அமைந்துள்ள கார்நாற்பதும் இவ்வாய்வுக் கட்டுரைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள இலக்கியங்களாகும்.*

*தலைவன் தலைவியைப் பிரிந்தும் தலைவி தலைவனைப் பிரிந்தும் இருக்கின்ற காலத்தைச் சித்தரிக்கும் சொற்சித்திரமே முல்லைப்பாட்டு. காடும் காடு சார்ந்த இடங்களையும் கொண்ட முல்லையில் நடக்கும் அகப்புறக் காட்சிகள் அனைத்தும் பண்டைத் தமிழகத்தினை நாமறிவதற்கு மிகச் சிறந்த சான்றாக அமைந்துள்ளது. கற்பு என்ற சொல்லின் பொருள் தவறாமல் நடப்பதாகும். இதை முல்லைப்பாட்டும் உணர்த்தி நிற்கின்றது. ஆண் பெண் என்ற வேறுபாடின்றி பொதுநிலை நோக்கோடு கற்பின் சிறப்பை எடுத்து இயம்புகிறது. அதிகாலைப் பொழுதில் எழுந்து தன் கடமையை மேற்கொள்ளும் ஆயர் குலப்பெண்களின் இல்லறசிறப்பினை சிறப்பாக எடுத்தியம்புவது முல்லைத்திணைப் பாடலாகும். அதனைத் தொடர்ந்து நால்வகைப்படைகளைப்பற்றியும், பண்டையத்தமிழரின் கருவிகளும், போர்த்தொழிலில் பெண்கள் ஈடுபட்டுள்ள நிலையினையும், பாசறையின் அமைப்பும், வெளிநாட்டவரும் மன்னரின் பணியாளர்களாக இருந்துள்ள நிலையினையும், போர் நெறியையும், செடி, கொடி, ஆறு முதலிய இயற்கை வருணனைகளையும் விரிச்சி கேட்டலாகிய வாழ்வியல் நம்பிக்கையையும் இவைபோன்ற பல அரிய தகவல்களையும் முல்லைத்திணைப் பாடல்களின் வழியாக அறிந்துகொள்ள முடிவதுடன் அதன் வழியாக முல்லைத்திணையின் பண்பட்ட வாழ்வினை நம்மால் உணர முடிகின்றது.*

சங்க காலத்து மக்களின் வாழ்க்கை முறை அவர்கள் வாழ்ந்திருந்த இடத்திற்கு ஏற்றவாறு அமைந்திருந்தது. உலகின் இயற்கை அமைப்பை ஒட்டி நிலங்களைப் பண்டைத் தமிழர்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்தாகப் பாகுபாடு செய்தனர். அந்த வகையில் அந்த மக்களின் வாழ்விடங்கள் ஐந்து நிலங்களின் அடிப்படையில் நோக்கப்படுகின்றன.

காடும் காடு சார்ந்த இடங்களும் முல்லை நிலம் எனப்பட்டன. முல்லை என்பது ஒரு வகைக் கொடி. காடுகளிலும் காடு சார்ந்த இடங்களிலும் முல்லைக்கொடிகள் செழித்து வளர்ந்தன. அவ்விடங்ளில் ஆடு மாடுகள் புல் மேய்வதற்கேற்ற மேய்ச்சல் நிலங்கள் இருந்தன. முல்லை நில மக்கள் ஆடு, மாடு முதலியவைகளை வளர்த்து அவை தரும் பயன்களையே பெரிதும் தம் உணவாகக்கொண்டு வாழ்ந்தனர். காடு சார்ந்த நிலங்களில் வரகு, அவரை, துவரை முதலிய கூல வகைகளும் விளைவிக்கப்பட்டன.

முல்லை நில மக்கள், ஆயர், இடையர், கோவலர், அண்டர் முதலிய பல பெயர்களாற் குறிப்பிடப்படுவர். மேலும், தொல்காப்பியர்,

"ஆயர்வேட்டுவர் ஆடுஉத்திணைப்பெயர்
ஆவயின் வரூஉம் கிழவரும்உளரே." [1]

என்று முல்லைத் திணைக்குரிய மக்களை விளக்குகிறார்.

அவர்கள் காட்டு ஒதுக்குகளில் சிறு இல்லங்கள் அமைத்து வாழ்ந்தனர். இல்லங்கள் வரகு வைக்கோலால் வேயப்பட்டன. குடியிருப்பைச் சுற்றி விலங்குகள் நுழையாதபடி முள் வேலியிடப்பட்டிருந்தது. விடியற்காலத்தே இடைப்பெண்கள் தாழிகளில் உறைந்திருக்கும் தயிரை மத்துப்பூட்டிக் கடைந்தார்கள். அவர்கள் மோரையும் வெண்ணெயையும் அயல் இடங்களுக்குக் கொண்டுசென்று விற்றார்கள். ஆடவர் விடியற்காலத்தே மாடுகளையும் ஆடுகளையும் மேய்ச்சல் நிலங்களுக்கு ஓட்டிச் சென்றார்கள், அவைகளைப் புலி ஓநாய் முதலிய விலங்குகள் கொல்லாதபடி காவல் காத்தார்கள். ஆடுகளும் மாடுகளும் மேயும் போது அவர்கள் மர நிழல்களில் இருந்து இனிய பண்களைப் புல்லாங்குழலில் வாசித்தனர். கொன்றைப் பழத்தைக் குடைந்து நெருப்புக் கொள்ளியால் துளையிட்டுச் செய்த குழல்களிலும் அவர்கள் இனிய இசைகளை அமைத்துப் பாடினார்கள்.

காடும் காடு சார்ந்த இடமுமான முல்லை நிலத்தில் அளவற்ற மேய்ச்சல் தரை குறைவற்றுக் கிடந்தது. எனவே மந்தைகளை மேய்ப்பதே அங்கு வாழ்ந்த மக்களுக்கு முதன்மையான தொழிலாக இருந்தது. தாங்கள் வாழ்வதற்காக குடிசைகளை அமைத்தார்கள், குடிசைகளுக்குப் பக்கத்திலே மாட்டுத் தொழுவங்களை அமைத்தார்கள்.

தனித்தனி குடும்பங்கள், தமக்கென குடிசைகள், தங்களது உடைமைகளாக ஆடுகள், மாடுகள் மற்றும் பொருட்கள், தேவையான அளவு பயிர்செய்யும் நிலம், தேவைக்கு அதிகமான மேய்ச்சல் நிலம் என்றிவ்வாறெல்லாம் முல்லை நிலத்து மக்கள் சற்று வசதியாக வாழ்ந்தார்கள் என்பதனை இலக்கியங்களின் வழி நம்மால் அறிந்து கொள்ள முடிகின்றது.

முல்லைத்திணை உணர்த்தும் கற்பு நெறி

முல்லைத்திணைக்குரிய சிறப்பே கற்பு தான். அதனால் தான் முல்லை சான்ற கற்பென்றனர். கற்பு என்ற சொல்லின் பொருள் சொல் தவறாமல் நடப்பதாகும். இதைத் தான் முல்லைப்பாட்டும் உணர்த்துகின்றது. பிரிந்து சென்ற தலைவன் வரும் வரையில் தலைவி ஆற்றியிருத்தல் மட்டுமே கற்பு நெறி அன்று. தலைவியிடம் கூறிய படியே தலைவனும் சொன்ன சொல் தவறாமல் குறித்த காலத்தில் வந்து சேருவதும் கற்பு நெறியாகும்.

---

[1] தொல்காப்பியம் பொருள். அகத். நூற்பா 967

முல்லைப்பாட்டின் தலைவி "**நெஞ்சாற்றுப்படுத்த நிறைதபு புலம்பொடு நூடு நினைந்து தேற்றியும்**"[2] என்று தனது நெஞ்சினை ஆற்றுப்படுத்தி தலைவனிடம் தான் கூறிய மொழிகள் அதாவது தலைவன் மீண்டு வரும் வரை தான் வருந்தாது இருப்பேன் என்று தான் கூறிய சொல்லில் இருந்து மாறுபடக் கூடாது என்பதற்காக தன்னைத் தேற்றிக் கொண்டு வாழ்கிறாள்.தலைவனும் போர் வினை முடித்து திரும்பும் வேளையில் வழியிலே கார்காலத்து மலர்கள் மலர்ந்திருப்பதைப் பார்க்கிறான். தான் தலைவியிடம் வருவேன் என்று சொன்ன காலம் வந்துவிட்டதை அறிந்து, உள்ளத்துடிப்போடு விரைந்து வருகின்றான். அவ்வகையில் முல்லைத்திணை தலைவனும் தலைவியும் கற்பு வாழ்க்கையின் இலக்கணத்துடன் சொன்ன சொல் மாறாமல் வாழ்ந்து கற்பு நலம் பேணுகின்றனர்.

**செல்வச் சிறப்பு**

செல்வம் உள்ளவர்களே வாழ்க்கையில் இன்பம் அடைய முடியும். செல்வம் இருந்தால் தான் வறியவர்களுக்கு கொடுத்து வழங்கி உதவி செய்யலாம். ஆதலால் இல்லறத்தில் வாழ்வோர் பொருளூட்டுவதை முதன்மையாகக் கொள்ளவேண்டும்.என்பதனை,

"**புணர்தரு செல்வம் தருபாக்குச் சென்றார்**"[3]

இம்மை மறுமை இன்பங்கள் பொருந்துவதற்குரிய செல்வத்தைத் தேடிக்கொண்டுவரும் பொருட்டுச் சென்றார் என்பதனை மேற்கண்ட வரிகள் விளக்குகின்றன. அதனைத் தொடர்ந்து,

"**கெடாஅப் புகழ்வேட்கைச் செல்வர் மனம்போல்**
**படாஅமகிழ் வண்டு பாண்முரலும்**"[4]

என்ற கார்நாற்பது பாடல்வரிகளின் மூலம் அழியாத புகழை விரும்புகின்ற செல்வர்களின் சிந்தையைப் போல, கெடாத மகிழ்ச்சியை உடைய வண்டு இசை பாடிக் கொண்டிருக்கும்" என்று கூறுவதிலிருந்து இவைகள் யாவும் செல்வத்தால் பெறும் இன்பத்திற்கு எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்றன. மேலும் தம்மை நாடி வந்தவர்களுக்கு கொடுப்பதும், பகைவரை அழிப்பதும் தமக்குப் புகழ் தரும் என்று நினைத்துப் பொருள் தேடச் சென்றார். என்பதனை

"**நச்சியார்க்கு ஈதலும் நண்ணார்த் தெறுதலும்**
**தன்செய்வான் சென்றார்**"[5]

என்ற வரிகளின் வழி அறிந்துகொள்ள முடிகின்றது. அத்துடன் நிலையான புகழைவிரும்பியும் பொருள் தேடுவதற்காக தலைவன் தலைவியை விட்டு பிரிந்து சென்றான் என்று

"மண் இயல் ஞாலத்து மன்னும் புகழ்வேண்டிப்
பெண் இயல் நல்லாய் பிரிந்தார்"[6]

என்ற வரிகளின் வழி அறிந்து கொள்ள முடிகின்றது. இவ்வரிகளின் வழி செல்வத்தின் சிறப்பினை நன்கு உணர்ந்து கொண்டு பண்டைத் தமிழர் தங்கள் வாழ்க்கையை நடத்தினர் என்பதனை அறிந்து கொள்ள முடிகின்றது.

**முல்லைநிலமக்களின் பயன்பாட்டுக்கருவிகள்**

ஆயர்கள் ஆநிரைகளை மேய்க்க, கொடுங்கோல் என்னும் வளைந்த கோலினைப் பயன்படுத்தியுள்ளனர் என்பதனை,

"**கொடுங்கோற் கோவலர் பின்நின்று உய்த்தர**"[7]

என்ற வரிகளின் மூலம் அறியமுடிகின்றது.

"**கவைமுள் கருவியின் வடமொழி பயிற்றி**"[8]

என்ற வரிகளின் வழி யானைப்பாகர்கள் கவைமுள் கருவியினை யானையை அடக்கப் பயன்படுத்தியுள்ளனர் என்பதனை விளக்குகின்றது. குதிரையை ஓட்டுவதற்கு மத்திகை என்னும் கருவியைப் பயன்படுத்தியுள்ளனர். மேலும் வில், வேல், வாள், கேடயம் முதலான போர்க்கருவிகளும் பயன்பாட்டில் இருந்துள்ளமையை முல்லைப்பாட்டின் வழி அறிய முடிகின்றது.

**பொழுதினைக் கணக்கிடும் கருவி**

ஒரு நாளில் பொழுதுகளை அளந்து கணக்கிட்டு அறிவதற்குக் கன்னல் என்ற கருவியைப் பயன்படுத்தியுள்ளனர். இதனை

"**குறுநீர்க் கன்னல் இனைத்து**"[9]

என்ற முல்லைப்பாட்டு வரிகள் நமக்கு உணர்த்தி நிற்கின்றது.

**நிமித்தம் பற்றியவை**

சங்க காலத்து மக்களின் வாழ்க்கை முறையினை நோக்கும் பொழுது பல நம்பிக்கைகள் இருந்தன. நிமித்தம் என்பது சகுனத்தைக் குறிக்கும். தமிழர்களுக்குச் சகுனத்தில் பெரும் நம்பிக்கை உண்டு. பொருள் தேடிச் சென்றாலும் போருக்குச் சென்றாலும் அவர்கள் சகுனத்தில் நம்பிக்கை வைத்திருந்தனர். புள்ளும் நாளும் அவர்களுக்கு

[2] முல்லைப்பாட்டு 81 -82

[3] கார்நாற்பது 11

[4] கார்நாற்பது 32

[5] கார்நாற்பது 7

[6] கார்நாற்பது 8

[7] முல்லைப்பாட்டு 15

[8] முல்லைப்பாட்டு 35

[9] முல்லைப்பாட்டு 58

இன்றியமையாத நிமித்தக் கூறுகளாக இருந்தன. அவற்றோடு பல்லியையும் அவர்கள் நிமித்தத்திற்கு நம்பியிருந்தனர். ஏதேனும் ஒரு செயலைப் பற்றி நினைக்கையிலோ பேசுகையிலோ வீட்டில் இருக்கும் பல்லி சத்தம் எழுப்பினால் அது பலிக்கும் என நம்பினர். அந்நம்பிக்கைக்கு சான்று பகரும் வகையில் வினைமேற்கொண்டு தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் தன் வருகையை தன் வீட்டு பல்லியே தலைவிக்கு அறிவித்து இருக்கும் என்று கூறுவதனை,

**"முன்னியது முடித்தனம் ஆயின், நன்னுதல்**
**வருவம் என்னும் பருவரல் தீரப்**
**படும்கொல், வாழி, நெடுஞ்சுவர்ப் பல்லி –**
**பரல்தலை போகிய சிரல் தலைக் கள்ளி"** [10]

என்ற நற்றிணையில் அமைந்துள்ள முல்லைத்திணைப் பாடலின் வழி அறிந்து கொள்ள முடிகின்றது.

**விரிச்சி கேட்டல்**

நடக்கப்போகும் நிகழ்வினைப் பற்றி அறிய கோவிலில் சென்று இறைவனை வழிபட்டு நல்ல சொல்லுக்காகக் காத்திருப்பர். அங்ஙனம் காத்திருக்கும் நேரத்தில் அயலில் உள்ளவர்கள் நல்ல சொற்களை கூறினால் தான் நினைத்த காரியமும் நல்லதாகவே நடக்கும் என்பது பழந்தமிழரின் நம்பிக்கையாகும். இந்த நம்பிக்கையை விரிச்சி கேட்டல் என்றனர்.

**"அரும்பு அவிழ் அலரி தூவுக் கைதொழுது**
**பெருமுதுபெண்டிர் விரிச்சி நிற்ப"** [11]
**"இன்னே வருகுவர் தாயர் என்போள்"** [12]

என்ற முல்லைப்பாட்டின் வரிகளின் மூலம் விரிச்சல் கேட்டல் விளக்கப்பட்டுள்ளது.

**கார்த்திகைத் திருநாள்**

கார்த்திகை நாளிலே வரிசையாக விளக்கு வைத்து விழாக் கொண்டாடும் வழக்கம் பண்டைத்தமிழகத்தில் இருந்தது. இதனை

**"நலமிகு கார்த்திகை நாட்டவர் இட்ட**
**தலைநாள் விளக்கின் தகையுடைய ஆகிப்**
**புலமெல்லாம் பூத்தன தோன்றி"** [13]

என்ற கார்நாற்பதில் இடம்பெற்றுள்ள வரிகளின் வழி கார்த்திகைத்திருநாளில் மக்கள் வீட்டு வாசல்களில் விளக்குகளை ஏற்றி வைக்கும் பழக்கம் வைத்திருந்தனர் என்பதினை நம்மால் நன்கு அறிந்து கொள்ள முடிகின்றது.

அகவாழ்வைப் போன்றே புற வாழ்விலும் முல்லை நில மக்கள் சிறப்புற்றிருந்தனர் என்பதனை நம்மால் நன்கு உணர முடிகின்றது. சான்றாக முல்லைத் திணையிலமைந்த பாடல்களின் வழியாக அறியப்படும் படைவகைகளும் பாசறை அமைப்புமே அதற்கு தக்க சான்றுகளாகத் திகழ்கின்றன.

**நால்வகைப் படைகள்**

யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை எனும் நால்வகைப் படைகளும் இருந்துள்ளன என்பதனை கீழ்க்காணும் முல்லைப்பாட்டு வரிகள் நமக்கு தெளிவுபடுத்துகின்றன.

**"எடுத்து எறி எஃகம் பாய்தலின் புண் கூர்ந்து**
**பிடிக்கணம் மறந்த வேழம் வேழத்துப்**
**பாம்பு பதைப்பன்ன பரூஉக்கை துமிய"** [14]

என்ற வரிகள் யானைப்படையையும்,

**"தேம்பாய் கண்ணி நல்வலம் திருத்தி**
**சோறு வாய்த்து ஒழிந்தோர் உள்ளியும்"** [15]

என்ற வரிகள் காலாட்படையையும்,

**"தோல் துமிபு, பைந்துணைப் பகழி மூழ்கலின்,**
**செவி சாய்த்து உண்ணாது உயங்கும் மா"** [16]

என்ற வரிகள் குதிரைப்படையினையும்

**"வினை விளங்கு நெடுந்தேர்"** [17]

என்ற வரிகள் தேர்ப்படையினையும் விளக்கி நிற்கின்றது.

**போர்த்தொழிலில் பெண்கள்**

மன்னன் போருக்குச் செல்லும் போது பெண்களும் சென்றுள்ளனர். இவர்கள் பாசறையிலுள்ள பாவை விளக்கின் ஒளி குறையும் போதெல்லாம் நெய்வார்த்து, ஒளி குறையாது

[10] நற்றினை 169

[11] முல்லைப்பாட்டு 10 - 11

[12] முல்லைப்பாட்டு 16

[13] கார்நாற்பது 26

[14] முல்லைப்பாட்டு 68 - 70

[15] முல்லைப்பாட்டு 71 - 72

[16] முல்லைப்பாட்டு 73-74

[17] முல்லைப்பாட்டு 103

பாதுகாத்து வந்துள்ளனர். இவர்கள் தமது தமது ஆடையுடன் ஒளி வீசும் வாளினைச் சேர்த்துக் கட்டியிருந்தனர் என்ற செய்தியினையும் முல்லைப்பாட்டின் வழி நம்மால் அறிந்துணரமுடிகின்றது.

**"திண்பிடி ஒள்வாள்**
**விரவுவரிக் கச்சின் பூண்ட மங்கையர்"** [18]

என்ற முல்லைப்பாட்டின் வரிகள் இச்செய்தியினை அறிவிக்கின்றன.

**பாசறையின் அமைப்பு**

பகை நாட்டின் மீது படையெடுத்துச் செல்லும் மன்னன் முல்லைக்காட்டில் பிடவம் செடிகளை வெட்டி முள்ளால் வேலியமைத்து பாசறை அமைத்த செய்தியினை முல்லைப்பாட்டிலிருந்து பெறமுடிகிறது. அங்குத் தழையால் கூரை வேயப்பட்டு வீரர்களுக்குத் தங்குமிடங்கள் அமைத்ததாகவும், இதில் மன்னனுக்கென்று உள்வீடு ஒன்று அமைக்கப்பட்டது என்றும், அவ்வீடும் திரைச்சீலையால் இரண்டாகப் பகுக்கப்பட்டிருந்தது என்றும் ஓர் அறையில் மெய்க்காப்பாளரான மிலேச்சியர்கள் தங்கியிருந்ததாகவும், மற்றோர் அறை மன்னனின் பள்ளியறையாக அமைந்திருந்தது என்றும் முல்லைப் பாட்டு தெரிவிக்கிறது.

மன்னனின் பாசறையில் காவலர்களாக கிரேக்கர்களாகிய யவனர்கள் இருந்துள்ள செய்தியினை முல்லைப்பாட்டின் வழி அறிந்துகொள்ளமுடிகின்றது.

**"மெய்ப்பை புக்க வெருவரும் தோற்றத்து**
**வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்"** [19]

வலிமையான உடலும் காண்பவர் அஞ்சும் படியான தோற்றமும் யவனர்கள் கொண்டிருந்தனர் என்று மேற்கண்ட முல்லைப்பாட்டின் வரிகள் நமக்கு உணர்த்தி நிற்கின்றன. யவனர்களுடன் மிலேச்சர்களும் மன்னனுக்குக் காவலாக இருந்துள்ளனர். அவர்கள் வாயால் பேச முடியாதவர்கள். உடல் உறுப்புகளின் மூலமாகவே செய்திகளைத் தெரிவிக்கக் கூடியவர்கள். காரணம் மன்னர்கள் தம் அந்தபுரத்துச் செய்திகள் வெளியில் தெரியாமல் இருப்பதற்காக இத்தகைய வாய்பேசமுடியாத மிலேச்சியர்களைப் பயன்படுத்தியுள்ளனர் என்பதையும் பெறமுடிகின்றது.

**"உடம்பின் உரைக்கும் உரையா நாவின்**
**படம்புகு மிலேச்சர் உழையர் ஆக"** [20]

என்ற வரிகள் மேற்கூறப்பட்ட செய்திக்கு சான்றுபகர்கின்றன.

**முல்லையும் வஞ்சியும்**

அகத்திணையான முல்லையினைப் பாடுகின்ற போது அதற்கு இயைந்த புறத்திணையான வஞ்சித் திணையையும் இணைத்துப் பாடியிருப்பது முல்லைப்பாட்டிற்குரிய சிறப்பாகும்.

முல்லைத் திணைக்கு நிலம் காடு. வஞ்சித்திணையின் நிலமும் காடே. தலைவனைப் பிரிந்து தலைவி முல்லை நிலமான வீட்டில் தங்கியிருத்தல் போலவே தலைவனும்,

**"எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்தன்**
**அஞ்சுகத் தலைச்சென்று அடல்குறித்து அன்றே"** [21]

என்று மண்ணாசை கொண்டு படையெடுத்து வரும் படையரசனை வெல்வதற்குப் படையெடுத்துச் சென்று முல்லை நிலமாகிய காட்டில் பாடி வீடு அமைத்துத் தங்கியிருக்கின்றான் என்று குறிப்பிடப்பட்டுள்ளதன் வாயிலாக மேற்கூறிய செய்திகள் யாவும் விளக்கப்பட்டுள்ளன.

**முல்லைப்பாட்டின் வழி அறியலாகும் வரலாற்றுத் தகவல்கள்**

அக்காலத்தில் பல மாடிகளைக் கொண்ட கட்டிடங்கள் அமைந்திருந்தன.

யானைப் பாகர்கள் தமது யானைகளை அடக்குவதற்கு உச்சரிக்கும் குறிப்பொலிகள் வடமொழியில் அமைந்திருந்தன.

பாவை விளக்குகள் பயன்பாட்டில் இருந்தன. ஒருபெண் இரண்டு கரங்களையும் இணைத்துக் குவித்து ஏந்திய வண்ணம் நிற்கின்ற பதுமையே பாவை விளக்கு ஆகும்.

தாழி போல அமைந்திருக்கும் அந்தக்கரங்களில் எண்ணெய் ஊற்றப்பட்டு திரிகொளுத்தப்படும்.

போர்க்களத்தில் பாசறையில் தங்குகின்ற அரசனுக்குப் பாதுகாப்பாக இருக்கும் காவலர்களுக்குத் துணையாக பெண்களும் பாசறைக்கு சென்று தங்குவார்கள்.

அங்கே எரிந்து கொண்டிருக்கும் விளக்குகளை அணையாமல் பார்த்துக் கொள்வார்கள். அவர்கள் எரிபந்தங்களை ஏந்தியவாறு திரிந்தார்கள்.

பாசறையில் தங்கும் ஒவ்வொரு பெண்ணிடமும் பளபளக்கும் கூரிய வாள் இருக்கும். எனவே பெண்கள் போர்பயிற்சி பெற்றவராயும் இருந்திருக்கிறார்கள்.

அந்நில நாட்டவர்களும் அக்காலத்தில் தமிழ்நாட்டில் வாழ்ந்திருக்கின்றனர். கிரேக்கர்கள் வணிகர்களாக வந்துள்ளனர். அவர்கள் யவனர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

அரசனின் அந்தப்புரத்தில் அந்நிய நாட்டினரையே காவலராக வைத்திருக்கும் வழக்கம் இருந்துள்ளது. அதிலும் வாய்பேச முடியாத ஊமையர்களான அந்நிய நாட்டவரே அந்தப்புரக்காவலுக்கு அமர்த்தப்பட்டனர். அந்தப்புர ரகசியங்கள்

[18] முல்லைப்பாட்டு 46 - 47

[19] முல்லைப்பாட்டு 60 -61

[20] முல்லைப்பாட்டு 65 - 66

[21] தொல். புறத்திணை நூற். 62

வெளியிடாமல் இருப்பதற்காகவே இந்த ஏற்பாடு வழக்கத்தில் இருந்துள்ளது. இவர்கள் மிலேச்சர்கள் என்று அழைக்கப்பட்டார்கள்.

திருமால் வாமன அவதாரம் எடுத்த கதையும் முல்லைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

துணை நூற்பட்டியல்


1. அனுராதா.ப சங்கப்பேழை
ரமணி பரந்தாமன்
அம்பத்தூர், சென்னை –53
முதல்பதிப்பு –
டிசம்பர் 2002.

**2.** கோவேந்தன். த அன்பொடு புணர்ந்த ஐந்திணை
சங்கப்பாடல்கள் முல்லை
வேமன் பதிப்பகம்
நுங்கம்பாக்கம்,
சென்னை – 34
முதல்பதிப்பு –
ஆகஸ்ட் – 2003.

3. சிதம்பரனார் . சாமி பதினெண் கீழ்க்கணக்கும்
தமிழர் வாழ்வும்
அறிவுப் பதிப்பகம்
ராயப்பேட்டை,
சென்னை – 14
முதல்பதிப்பு –
அக்டோபர் 2003.

4. சுப்பு ரெட்டியார் . ந தொல்காப்பியம்
காட்டும் வாழ்க்கை
சந்தியா பதிப்பகம்
அசோக் நகர் ,
சென்னை – 83
முதல்பதிப்பு – 2011

5.தமிழண்ணல்(உ.ஆ) தொல்காப்பியம்மூலமும்
உரையும்
மீனாட்சி புத்தக நிலையம்
மதுரை -625 001
முதல்பதிப்பு – ஏப்ரல் 2008.

6. மாரிமுத்து. செ பண்டைய இலக்கியம் காட்டும்
தமிழர் நாகரிகமும் பண்பாடும்
அருள் பதிப்பகம்
எம்.ஜி.ஆர். நகர், சென்னை – 78
முதல்பதிப்பு – பிப்ரவரி 2008.

7. ருக்மணி . இரா முல்லைப்பாட்டும் பண்டைத்தமிழகமும்
காவ்யா வெளியீடு
கோடம்பாக்கம் , சென்னை – 24
முதல்பதிப்பு – ஆகஸ்ட் 2008.

8. ----- பதினெண்கீழ்க்கணக்கு
நூல்கள
மூலமும் தெளிவுரையும் 3
வர்த்தமானன் பதிப்பகம்
தமிழ் நிலையம் சென்னை – 17.
புதிய பதிப்பு – 2007.